www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

முதலாம் தவணைப் பரீட்சை - 2022

# Conducted by Field Work Centre, Thondaimanaru

# 1st Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் Hindu Culture | Three Hours 10 min / Gr -12 (2023) | 46 | T | I,II |

## பகுதி I

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. வேதங்கள் "சுருதி" எனச் சுட்டப்படுவதற்கான காரணம்
    1) அநாதி என்பதால்
    2) மனிதரால் இயற்றப்படாதது என்பதால்
    3) காதால் கேட்கப்பட்டது என்பதால்
    4) புலனுணர்வால் அறியப்பட்டது என்பதால்
    5) ரிஷிகளால் இயற்றப்பட்டது என்பதால்

02. ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றிக் கூறும் ஆகமம்
    1) வாதுளம் 2) காமிகம் 3) காரணம்
    4) சிந்தியம் 5) கிரணம்

03. மகாபாரதத்தில் அரச உபாயம், மக்கள் ஒழுக்கம் பற்றிக் குறிப்பிடுவது
    1) சாந்தி பருவம் 2) வீஸ்ம பருவம் 3) துரோண பருவம்
    4) வன பருவம் 5) ஆதி பருவம்

04. பிராமணிய வழிபாட்டையும், நாட்டார் வழிபாட்டையும் இணைத்துக் கூறுவது.
    1) திருமுருகாற்றுப்படை 2) கலித்தொகை 3) புறநானுறு
    4) தொல்காப்பியம் 5) அகநானூறு

05. இராமாயணத்தில் ஆதிகவி என அழைக்கப்பட்டவர்.
    1) கம்பர் 2) துளசிதாஸர் 3) வியாசர்
    4) வான்மீகி 5) கவீர் தாஸர்

06. நீண்ட ஆயுளை அளிக்கவல்ல மந்திரம்.
    1) பேஷஜானி 2) அபிசாரணி 3) பௌஷடிகாணி
    4) ராஜகர்மாணி 5) ஸ்திரீகர்மாணி

07. யசுர்வேத மந்திரங்களை ஓதுபவர்கள்.
    1) வேதாதாக்கள் 2) உத்தாதாக்கள் 3) அத்வர்யுக்கள்
    4) அத்திரி 5) வசிட்டர்

08. சிந்துவெளிப்பிரதேசம் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலம்.
    1) 1800 – 1900 2) 1900 – 1910 3)1910 – 1920
    4) 1922 – 1930 5) 1922 – 1940

09. ஒருமைவாதத்தின் ஆரம்பம் இடம்பெறும் பகுதி.
    1) நாஸதீயப்பாடல் 2) பிரமச்சரிய பாடல் 3) முனிசூக்தப்பாடல்
    4) யமசூக்தம் 5) வர்ணசூக்தப்பாடல்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

10. சாக்த ஆகமங்களை எவ்வாறு அழைப்பர்.
   1) சங்கிதைகள்
   2) தந்திரங்கள்
   3)பாஞ்சராத்திரம்
   4) வைகாசனமரபு
   5) பாகவதசாஸ்திரம்

11. தென்னிந்திய வரலாற்றில் கோபுரங்கள் மிகுதியாக அமைக்கப்பட்ட காலம்.
   1) சங்ககாலம்
   2) சங்கமருவிய காலம்
   3) பல்லவர் காலம்
   4) சோழர் காலம்
   5) விஜயநகர நாயக்கர் காலம்

12. இராஜராஜ சோழனின் பிறந்த நாள்
   1) வைகாசி மூலம்
   2) ஆடிச்சுவாதி
   3) சித்திரைச்சதயம்
   4) ஐப்பசிச்சதயம்
   5) புரட்டாதிப்பூரம்

13. இந்தியத் துணைக் கண்டம் எங்கும் சைவப் பாண்பாட்டைப் பரப்பியவன் .
   1) இராஜேந்திரன்
   2) இராஜராஜ சோழன்
   3) சிம்மவர்மண்
   4) மகேந்திரவரமன்
   5) நந்திவர்மன்

14. “மாயோன் மேய காடுறை உலகம்” இடம்பெறும் நூல்
   1) திருக்குறள்
   2) தொல்காப்பியம்
   3) கலித்தொகை
   4) நாலடியார்
   5) நன்னூல்

15. சிவ புராணங்களில் ஒன்று
   1) வராக புராணம்
   2) ஆக்கினேய புராணம்
   3) பிரம புராணம்
   4) பதும புராணம்
   5) பாகவத புராணம்

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A**<br>சத ருத்திரியம் | **F**<br>கர்ஷணம் | **K**<br>தேவரடியார் | **P**<br>வேள்வி |
| **B**<br>கீலாபரிட்சணம் | **G**<br>யோக நூல் | **L**<br>101 சாகை | **Q**<br>பிடாரர்கள் |
| **C**<br>மகாபாரதம் | **H**<br>சுக்கில யசுர் | **M**<br>சாத்திரங்கள் | **R**<br>ஐந்தாம் வேதம் |
| **D**<br>நந்திக் கொடி | **I**<br>வெறியாட்டு விழா | **N**<br>பக்தி நூல் | **S**<br>மாயோன் |
| **E**<br>நடுகல் வழிபாடு | **J**<br>வேதவிருத்தி | **O**<br>கொற்றவை | **T**<br>சுப தந்திரம் |

16. யசுர்வேதத்தோடு தொடர்புடைய தொகுதி
   1) A, H, L, P
   2) B, G, M, S
   3) C, I, N, S
   4) D, J, O, T
   5) E, F, K, Q

17. சைவசமயத்தின் சிறப்புநூலுடன் தொடர்புடைய தொகுதி.
   1) A, H, N, S
   2) C, J, O, T
   3) P, F, M, T
   4) D, G, L, R
   5) E, I, O, S

18. இதிகாச வரலாற்றோடு தொடர்புடைய தொகுதி
   1) A, F, N, S
   2) C, G, N, R
   3) B, J, O, T
   4) E, F, L, P
   5) D, H, M, S

19. சோழர்கால சமயநிலையோடு தொடர்புடைய தொகுதி
   1) B, G, L, Q
   2) D, J, K, Q
   3) C, J, O, S
   4) E, H, O, R
   5) D, H, N, Q



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

20. சங்ககால சமயநிலையோடு தொடர்புடைய தொகுதி.

1) D, H, M, R 2) A, I, K, O 3) E, I, O, S 4) E, F, M, P 5) C, I, O, T

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

21. அதர்வவேதம்
1) பிற்பட்ட வேதம்
2) பிரம வேதம்.
3) மாந்திரீக நம்பிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது.
4) செய்யுள் மட்டும் உடைய வேதம்
5) 6000 பாடல்களை உடையது.

22. சிந்துவெளிக்காலம்
1) அகழ்வாராட்சிக் காலம் 1922 – 1930 வரை ஆகும்.
2) ஹரப்பா மேற்குப் பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது.
3) கி.மு 3250 – 5000 வரையான காலப்பகுதி
4) மொகஞ்சதாரோ பாகிஸ்தானிலுள்ளது.
5) ஆய்வுகள் சேர் ஜோன் மார்ஷலின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

23. இதிகாசங்கள்
1) சிவரகசியம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவில்லை.
2) மகாபாரதத்தை ஐந்தாம் வேதம் என்பர்.
3) இதிகாசங்கள் இந்துசமய கலைக் களஞ்சியமாகும்.
4) குப்தர் காலத்தில் இறுதி வடிவம் பெற்றது.
5) மகாபாரதம் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெறவில்லை.

24. சிவாகமங்கள்
1) ஆகமம் என்பது தொன்றுதொட்டு வரும் அறிவு
2) காமிகம் முதல் வாதுளம் வரை 28 ஆகமங்கள்
3) "ஆகமமாகி அண்ணிப்பான்" என்ற பாடலை திருமூலர் பாடினார்
4) ஞானாபாதம் ஆகமாந்தம் எனவும் அழைக்கப்படுகிறது.
5) ஆகமங்கள் சிவபேதம், உருத்திரபேதம் இரு வகைப்படும்.

25. பண்பாடு
1) பண்பாடு பழந்தமிழ் இலக்கியங்களில் சால்பு என அழைக்கப்படுகிறது.
2) குறியீட்டு தன்மை அற்றது.
3) அகவயம் சார்ந்தது
4) மெதுவாக வளரும்
5) கடைப்பிடிப்பது கடினம்.

(25x4=100 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் இருபது புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி I

01. **"இந்து நாகரிகத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்குவது சிந்து வெளி காலமே" இக்கூற்றினை ஆதாரமாக கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.**
   அ) சான்றாதாரங்கள்
   ஆ) சிவ வழிபாட்டு முறைகள்
   இ) நுண்கலைகள்
   ஈ) வாழ்க்கை முறைகள்

(5+5+5+5=20 புள்ளிகள்)

02. **இந்துப் பண்பாட்டு மரபில் வேதங்கள் பெறும் முக்கியத்துவங்கள் பற்றி மேல்வரும் விடயங்களில் ஆராய்க.**
   அ) வேதங்களின் அமைப்பு
   ஆ) சமயமரபு
   இ) முக்கியத்துவம்
   ஈ) தத்துவ சிந்தணை

(5+5+5+5=20 புள்ளிகள்)

03. **"இந்துப் பண்பாட்டு மரபில் சோழர்காலம் பொற்காலமாகும்" இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் விடயங்களைப் பரிசீலிக்குக.**
   அ) அரசர்களின் பங்களிப்பு
   ஆ) கோயில்களும், கலைகளும்
   இ) பக்தி இலக்கியங்கள்
   ஈ) வைணவ நெறியின் வளர்ச்சி

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. **சங்க கால சமய நிலை பற்றி விளக்கி ஆராய்க.** (20 புள்ளிகள்)

05. **நாகரிகம் பண்பாடு என்பவற்றினை விளக்கி இந்து நாகரிகத்தின் சிறப்புக்களை விரிவாக கூறுக.** (20 புள்ளிகள்)

06. **இந்து சமூதாயத்தில் இராமாயணம் பெறும் முக்கியத்துவவத்தை விளக்குக.**

20 புள்ளிகள்)

07. **இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.**
   அ) ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்
   ஆ) ஆகமங்களின் சிறப்பு

(10+10=20 புள்ளிகள்)

08. **"இந்து பண்பாட்டின் கருவூலங்களாக விளங்குபவை புராணங்களேயாகும்" இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.**
   அ) புராணங்களின் அமைப்பு
   ஆ)பிற்கால சமய மரபுகளில் செல்வாக்கு

(10+10=20புள்ளிகள்)



agaram.lk